கவனிக்க .- 2026.03.20ஆந் திகதிய 2481ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2482- 2026 මාර්තු මස 27 වැනි සිකුරාදා - 2026.03.27

2482 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி II - சட்டம் சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| மீயுயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்ற விசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | |
| மரணசாசன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக்கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 30 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**
**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 17ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, ஏப்பிறல் மாதம் 02ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ்.டீ.பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் .

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


29- B 82777 - 403 (2026/03)

# நானாவித அறிவித்தல்கள்

## நிறுவனத்தை மூடுவதற்கான அறிவிப்பு
## மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில்
## ( கொழும்பில் நடைபெற்ற அதன் சிவில் அதிகார வரம்பின் செயல்பாட்டில்)

நோர்வுட் ஃபேஷன்ஸ் (பிரைவேட்) லிமிடெட் ( பீவி 100463) நிறுவனம், வத்தளை,பழைய நீர்கொழும்பு வீதி, இல. 93 இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்டிருப்பது தொடர்பான விடயத்தில்

*- மற்றும்-*

வழக்கு இல. : CHC 10/2026/ CO
நடைமுறை : மூடுதல்
செயல்முறை: சுருக்கம்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பகுதி XII பிரிவுகள் 270 (e) மற்றும் 270(f) இன் கீழ் நீதிமன்றத்தால் நிறுவனம் மூடுவதற்கான விண்ணப்பம் தொடர்பான விடயத்தில்,

செலான் வங்கி பிஎல்சி.
செலான் டவர்ஸ், இல. 90, காலி வீதி, கொழும்பு 03.

*மனுதாரர்*

மேல் மாகாணத்தின் ( கொழும்பில் ஹோல்டன் ) உயர் நீதிமன்றத்தால், வத்தளை, பழைய நீர்கொழும்பு வீதி, இல. 93 இல் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தைக் கொண்ட மேற்கூறிய பெயரிடப்பட்ட நோர்வுட் ஃபேஷன்ஸ் ( பிரைவேட்) லிமிடெட் (பீவி 100463) நிறுவனத்தை மூடுவதற்கான மனு, அதன் சிவில் அதிகார வரம்பைப் பயன்படுத்தி, மனுதாரரால் மேற்கூறிய நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது என்றும், மேற்கூறிய மனுவை 2026, மே மாதம் 18 ஆந் திகதி அன்று நீதிமன்றத்தில் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், மேற்கூறிய மனுவில் ஒரு உத்தரவை பிறப்பிப்பதை ஆதரிக்கவோ அல்லது எதிர்க்கவோ விரும்பும் மேற்கூறிய நிறுவனத்தின் எந்தவொரு கடன் வழங்குநரும் அல்லது பங்களிப்பாளரும் விசாரணையின் போது நேரில் அல்லது அவரது வழக்கறிஞர் மூலம் இந்த நோக்கத்திற்காக ஆஜராகலாம் என்றும் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது. மேலும், கீழே கையொப்பமிடப்பட்டவர் பரிந்துரைக்கப்பட்ட கட்டணத்தை செலுத்தியவுடன், மேற்கூறிய நிறுவனத்தின் எந்தவொரு கடன் வழங்குநருக்கும் அல்லது பங்களிப்பாளருக்கும் மனுவின் நகல் வழங்கப்படும்.

கையொப்பமிட்டது :

வயோமா ஏ பரணகம மற்றும் அவரது உதவியாளர்கள்,
வழக்கறிஞர்கள், சட்டத்துறை,
செலான் வங்கி பிஎல்சி,
செலான் டவர்ஸ்.
இல. 90, காலி வீதி,
கொழும்பு 03.

குறிப்பு : மேற்கண்ட மனுவின் விசாரணையில் முன்னிலையாக விரும்பும் எந்த நபரும், தாம் அப்படிச் செய்ய விரும்புகிறார்கள் என்பதை எழுத்து மூலம் அறிவிக்கும் அறிவிப்பை மேலே குறிப்பிடப்பட்ட மனுதாரருக்கு வழங்கவோ அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பவோ வேண்டும். அந்த அறிவிப்பில் அந்த நபரின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும் அல்லது அது ஒரு நிறுவனம் என்றால், அந்த நிறுவனத்தின் பெயரும் முகவரியும் குறிப்பிடப்பட வேண்டும்.மேலும், அந்த அறிவிப்பு அந்த நபரால் அல்லது நிறுவனத்தால் அல்லது அவர்களின் வழங்கறிஞரால் கையொப்பமிடப்பட்டிருக்க வேண்டும். அத்தகைய அறிவிப்பு நேரடியாக வழங்கப்பட்டாலோ அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டாலோ, அது 2026, மே மாதம் 17 ஆந் திகதி அன்று பிற்பகல் 4.00 மணிக்குள் மேலே குறிப்பிடப்பட்ட முகவரியை அடையும் வகையில் போதுமான நேரத்துடன் அனுப்பப்பட்டிருக்க வேண்டும்.

2026, பெப்புருவரி 17.

03- 1153

## அறிவித்தல்

## மேல் மாகாண வர்த்தக மேல் நீதிமன்றத்தில்
## ( கொழும்பில் நடைபெறுகின்றது)

இல.106, லேக் வீதி, பொரலஸ்கமுவவில் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தை உடைய டீஸ்டார் சிலோன் ( பிரைவேட்) லிமிடெட் (PV 80160) எனும் நிறுவனத்தை 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் (திருத்தப்பட்டதன்படி) 272 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அதன் சட்டதிட்டங்களுக்கு அமைவாக நீதிமன்றத்தின் மூலம் கலைப்பு செய்வதற்காக முன்வைக்கப்பட்டுள்ள விண்ணப்பம் தொடர்பானது

வழக்கு இலக்கம். : CH/09/26/CO
நடபடிமுறை : சாதாரண
தன்மை: ஒடுக்குதல் ( கம்பனி)
பெறுமதி: ரூ.83,460,625.00

க்லெப் இம்போர்ட்ஸ் ( பிரைவேட்) லிமிடெட்,
இல.19/2,
போகஹஹேன வீதி, பத்தரமுல்ல.

*- மனுதாரரர்-*

*எதிர்*

01 ஹப்புரச்சிகே டொன் புத்தி நுவன் கருணாரத்ன,
106, லேக் வீதி,
பொரலஸ்கமுவ.

02 அரோஷா உதேனி பிரியங்கர ரூபசிங்க,
57/5/A,தெலகபாத வீதி, வனவாசல,
களனி.

03 இலேபெரும ஆராச்சிலாகே தோன லலிதா கருணாரத்ன,
"ரஞ்சனி" பல்லேவெல,
உடுபத்தாவ.

04 மடப்புலி ஆராச்சிலாகே தில்ஷானி மடப்புலியாரச்சி,
349/10B,5 ஆவது லேன், பைப் வீதி,கொஸ்வத்த,
பத்தரமுல்ல.

01 ஹப்புரச்சிகே டொன் சரச்சந்திர கருணாரத்ன,
106, லேக் வீதி,
பொரலஸ்கமுவ.

*பிரதிவாதிகள்*

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 272 ஆம் பிரிவின் கீழ் மற்றும் அதன் சட்டதிட்டங்களுக்கு அமைவாக மேற் குறிப்பிடப்பட்டுள்ள கம்பனியை ஒடுக்குவதற்கான உத்தரவு கோரி க்லெப் இம்போர்ட்ஸ் (பிரைவேட்) லிமிடெட் கம்பனியின் மூலம் 2026, பெப்புருவரி மாதம் 02 ஆந் திகதி விண்ணப்பமொன்று இக் கௌரவ நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

குறித்த விண்ணப்பமானது 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 26 ஆந் திகதி மீள் அறிவிப்பிற்காகவும் 2026 ஆம் ஆண்டு மே மாதம் 15 ஆந் திகதி இது தொடர்பான விசாரணைக்காகவும் எடுத்துக் கொள்ளப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

அவ் விண்ணப்பம் தொடர்பில் கட்டளையொன்றை செய்வதற்காக உதவுவதற்கு அல்லது அதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதற்கு விரும்பும் அக்கம்பனியின் எந்தவொரு கடன்தருநர் அல்லது உதவுத்தொகை செலுத்துநர் அந்நோக்கத்திற்காக விசாரணையின் போது தோற்ற முடியும் எனவும் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மனுதாரரின் சட்டத்தரணி,
ரம்ஸி பாச்சா அஸோசியேட்ஸ்.,
இல. 367, 3/1, டேம் வீதி, கொழும்பு 12,
தொலைபேசி: 0112 432433,0772 650522,
மின்னஞ்சல்:ramzibachassocites@gmail.com

03- 1091

பாராளுமன்றம்

புத்தஷிராவக்க பராமரிப்பு மையத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

தேவானந்த சுரவீர ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்ற நிலையியற் கட்டளை இல. 53(1) இன் கீழ் " புத்தஷிராவக்க பராமரிப்பு மையத்தை கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்"என அறியப்படுவதான சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு உத்தேசித்துள்ளேன் என இத்தால் அறியத்தருகின்றேன்.

சட்டமூலத்தின் நோக்கம் யாதெனில் பின்வரும் பொதுக் குறிக்கோள்களை கொண்டிருக்கும் அத்தகைய பராமரிப்பு நிலையத்தை கூட்டிணைப்பதாகும்:-

(அ) புற்றுநோய் காரணமாக துன்புறுகின்ற பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களுக்காக உடல், உள ரீதியான சிகிச்சைகளை வழங்குதல்;

(ஆ) பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்களான புற்றுநோயாளர்களுக்கு பிரத்தியேகமான பராமரிப்பு நிலையமொன்றினைக் கொண்டுநடாத்துதல், மற்றும் ;

(இ) புற்றுநோய் சிகிச்சைக்கான மஹரகம அபேக்ஷா வைத்தியசாலைக்கு வருகை தரும் பிக்கு, பிக்குணிகள் மற்றும் ஏனைய சமயத் தலைவர்கள் சிகிச்சை பெறும் காலப்பகுதியில் அவர்களுக்கான தங்குமிட வசதிகளைச் செய்து கொடுத்தல் ;

தேவானந்த சுரவீர,
பாராளுமன்ற உறுப்பினர்.

03 -1109

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது